1975 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டம்தான் இன்றைக்கு தமிழ்நாட்டை காப்பாற்றி வருகிறது. இந்த மாவட்டத்திற்கு எல்லாவித உதவியும் செய்யப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு கூடுதலாக கொடுக்கவில்லை என்றாலும் மாநில அரசு கொஞ்சம் கூடுதலாக சேர்த்துக் கொடுத்தால் நிச்சயமாக விவசாயிகள் அரசுக்கு கொடுக்க முன் வருவார்கள். அரசாங்கம் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நாம் ஏற்கெனவே செய்திருக்கிறோம். ரூ. 74 மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. நாம் ரூ. 89 கொடுக்கிறோம். சர்ப்ளஸ் நெல்லை ரூ. 100க்-கு வாங்குகிறோம்.

திரு. கே. எ. வகாப் : உரம் இரட்டிப்பான விலையாகியிருக்கிறது என்று சொன்னார்கள். அண்மையிலே கூட ரூ. 15 கூட்டி இருக்கிறார்கள். இப்படி விலையை கூட்டிக்கொண்டே போகிறார்கள். நீங்களும் கேட்கிறீர்கள். நாங்களும் கேட்கிறோம், விவசாயிகளும் கேட்கிறார்கள். ஆகவே, பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஆகவே, மத்திய அரசை சொல்லிக் கொண்டிருக்காமல், இப்பொழுது ஏறி இருக்கிற விலையையாவது தமிழக அரசே ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லிக்கொண்டுதான் இருக்க வேண்டும் கேட்டுக்கொண்டுதான் இருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இறங்கி வரும் வரை நாம் அப்படித்தான் செய்யவேண்டும்.

குடிநீர் வழங்கும் திட்டங்கள்

* 611 வினா

திரு. வா. முத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சியின் வெங்கடேசபுரியில் ரூபாய் இருபதாயிரம் செலவில் இரு ஆழ் துளைக் கிணறுகள் போடப்பட்டு அத்துடன் கையினால் இயக்கப்படும் குழாய்கள் பொருத்தப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

*612 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to remove the silt in the Rama nayakani tank near Hosur Town and to deepen it, for supplying drinking water to Hosur Town; and